**PRIMARY SCHOOL**

**SECOND SEMESTRAL ASSESSMENT - 2013**

**TAMIL LANGUAGE - PAPER 2**

**PRIMARY 4**

பெயர் : ____________________ தேதி : ____________________

வகுப்பு : தொ.நி: 4 ______ மதிப்பெண்கள் : ____________/45

Total Time : 1h 30 mins

23 Questions

INSTURCTIONS

Do not open the booklet until you are told to do so.

Follow all instructions carefully.


Answer all questions.

 **P4 SA2**

# PRIMARY SCHOOL
# SEMESTRAL ASSESSMENT 2 ( )
# PRIMARY 4
# TAMIL LANGUAGE

*கட்டுரை (தாள் 1)*

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது . படத்தின் அடியில் உதவிச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன . நீ அவற்றைக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் .




| | |
|---|---|
| சந்தைக்கு | வேகமாக உதைத்து |
| குறும்புத்தனம் | கண்ணாடி ஜாடி |
| எச்சரிக்கை | வீடு திரும்பியதும் |
| பந்து விளையாட்டு | அதிர்ச்சி |

## 1.வேற்றுமை

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. ( 8 மதிப்பெண்கள்)

ஏழுமலை பள்ளி முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தான். போகும் 1) __________ ஏதோ சத்தம் கேட்டது. அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். அங்கு ஒரு பூனை நொண்டி நொண்டி நடந்து வருவதைப் பார்த்தான். அதைப் பார்த்ததும் 2)__________ அதன்மேல் இரக்கம் உண்டாயிற்று. அவன் 3)__________ தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான். முதலில் அதற்குப் பால் கொடுத்தான். பின், அதன் காயத்தில் மருந்து போட்டுக் கட்டுக் கட்டினான். அவன் அதைத் தன் செல்லப் பிராணியாக வளர்க்க 4) __________ அனுமதி கேட்டான். அதைத் தன் செல்லப் பிராணியாக வைத்துக்கொண்டான்.

1. (1) வழியை (2) வழியிலிருந்து
   (3) வழியில் (4) வழிக்கு ( )

2. (1) அவனுடைய (2) அவனுக்கு
   (3) அவனை (4) அவனால் ( )

3. (1) அதற்கு (2) அதனுடைய
   (3) அதில் (4) அதை ( )

4. (1) அம்மாவுக்கு (2) அம்மாவிடம்
   (3) அம்மாவை (4) அம்மாவின் ( )

2 செய்யுள்\பழமொழி

| |
|---|
| பின்வரும் செய்யுள்களில்\பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எண்ணை அடைப்பினுள் எழுது. (10 மதிப்பெண்கள்) |

5. சுடினும் செம்பொன்_______________ கெடாது.

(1) சூரிய ஒளி (2) தீபவொளி

(3) தன்னொளி (4) சுடரொளி ( )

6. ____________ அழகு வரும்பொருள் உரைத்தல்.

(1) அறிஞர்க்கு (2) மந்திரிக்கு

(3) கற்றார்க்கு (4) அரசருக்கு ( )

7. இளமையில் ______________முதுமையில் வறுமை.

(1) சோம்பல் (2) சுறுசுறுப்பு

(3) விடாமுயற்சி (4) தன்னம்பிக்கை ( )

8. ஒன்றுபட்டால் உண்டு ____________.

(1) வாழ்க்கை (2) மலர்ச்சி

(3) பயணம் (4) வாழ்வு ( )

9. ஆழம் ______________ காலை இடாதே.

(1) தெரியாமல் (2) அறியாமல்

(3) உணராமல் (4) அளக்காமல் ( )

**3.** தெரிவிடைக் கருத்தறிதல்
பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி. (**10** மதிப்பெண்கள்)

ஒரு நாள் சங்கீதா தன் தோழிகளோடு அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் விளையாடிக் கொண்டிருந்தாள். திடீரென்று அவள் தலையில் ஒரு பெரிய மரக்கட்டை வந்து விழுந்தது. அவள் தலையிலிருந்து ரத்தம் வடிந்தது. அவளால் வலியைப் பொறுக்க முடியவில்லை. அதனால், அவள் அழத் தொடங்கினாள்.

அப்போது அந்த வழியாக ஒரு காவலர் வந்தார். சங்கீதா அழுதுகொண்டிருப்பதை அவர் கண்டார். உடனே அவள் அருகில் சென்றார். அவளை விசாரித்தார். அதற்குள் அங்கு ஒரு கூட்டம் கூடியது. சங்கீதாவின் தோழிகள் மேல் மாடியிலிருந்து ஒருவர் வீசிய மரக்கட்டை சங்கீதாவின் தலையில் விழுந்ததாகக் கூறினார்கள். அவர்கள் அந்த வீட்டைச் சுட்டிக் காட்டினார்கள்.

மேல் மாடியிலிருந்து பொருள்களைக் கீழே வீசுவது பிறருக்கு ஆபத்தை உண்டாக்கும். அது ஆபத்தான செயல் ஆகும் என்று காவலர் கூறினார். அவர் உடனே அந்த வீட்டுக்குச் சென்றார். அந்தக் கட்டையை வீசியவரை கைது செய்தார். செய்தியைக் கேட்ட சங்கீதாவின் பெற்றோர் ஓடி வந்தனர். அவர்கள் சங்கீதாவை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எண்ணை அடைப்பினுள் எழுது. (**10** மதிப்பெண்கள்)

10 சங்கீதா **எங்கே** விளையாடிக்கொண்டிருந்தாள்?

(1) வீட்டில்
(2) மேல் மாடியில்
(3) அடுக்குமாடி கட்டடத்தில்
(4) அடுக்குமாடிக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் ( )

11 சங்கீதாவின் தலையிலிருந்து **ஏன்** ரத்தம் வடிந்தது?

(1) அவள் விழுந்துவிட்டதால்
(2) அவள் தோழி தள்ளிவிட்டதால்
(3) மரக்கட்டை விழுந்ததால்
(4) அவள் ஓடியதால் ( )

12 காவலர் **ஏன்** சங்கீதாவை விசாரித்தார்?

(1) சங்கீதா அவரிடம் உதவி கேட்டதால்
(2) தோழி அவரிடம் உதவி கேட்டதால்
(3) அவர்கள் சத்தம் போட்டதால்
(4) சங்கீதா அழுவதைப் பார்த்ததால் ( )

13. **எந்தச்** செயல் பிறருக்கு ஆபத்தை உண்டாக்கும்?

(1) ஒன்றுகூடி விளையாடுவது
(2) தோழிகளோடு விளையாடுவது
(3) மாடிப்படியிலிருந்து பொருள்களைக் கீழே வீசுவது
(4) கட்டடத்தின் கீழ்த்தளத்தில் விளையாடுவது ( )

14. மரக்கட்டையை வீசியவருக்கு **என்ன** நேர்ந்தது?

(1) அவர் கைது செய்யப்பட்டார்
(2) அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்
(3) அவர் தப்பித்துவிட்டார்
(4) அவர் மன்னிக்கப்பட்டார் ( )

**4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

**பின்வரும் பகுதியில் 4 கோடிட்ட இடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அடியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து கோட்டினுள் எழுது.**

**(8 மதிப்பெண்கள்)**

ஓய்வு நேரத்தில் பாலன் தன் வீட்டின் அருகிலுள்ள நூலகத்திற்குச் செல்வான். அவனுக்கு நூலகத்திற்குச் செல்வது என்றால் கொள்ளை 15)________________.அங்குச் சென்றதும் முதலில் அவன் ஆங்கிலப் பிரிவுக்குச் சென்று சில புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்ப்பான். அவற்றை அவனால் படிக்க முடியுமா என்று பார்ப்பான். பேழையிலிருந்து இரண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பான். பின்னர், அவன் தமிழ்ப் பிரிவுக்குச் செல்வான், அங்கும் அவன் 16) ________________ செய்வான்.

சில புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து இருக்கையில் அமர்ந்து 17)____________________வாசிப்பான். புத்தகம் வாசிப்பது அறிவை வளர்க்கும் என்பதை அவன் உணர்ந்து இருந்தான். வாசித்தப் பிறகு, தான் படித்ததைப் பற்றிச் சிந்திப்பான். பின்னர், சில புத்தகங்களை இரவல் பெற்றுக் கொண்டு வீடு திரும்புவான். இவ்வாறே அவன் ஓய்வு நேரத்தைக் கழித்ததால் அவன் தன் பள்ளியிலேயே 18)______________ மாணவனாகத் திகழ்கிறான். அவனை எண்ணி அவன் பெற்றோர் பெருமைப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| 1. முன்மாதிரியான | 5. சிறந்த |
| 2. அமைதியாக | 6. அன்பு |
| 3. என்ன | 7. சத்தமாக |
| 4. அவ்வாறே | 8. ஆசை |

## 5.சுயவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது. (9 மதிப்பெண்கள்)**

விக்ரம் பள்ளி முடிந்து வீடு திரும்பினான். அவன் வீட்டின் கதவு பூட்டியிருந்தது. இது அவனுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அவன் வருகைக்காக அவன் அம்மா தினமும் வாசலில் காத்துக் கொண்டிருப்பார். அம்மாவைக் காணாதது அவன் மனத்தை என்னவோ செய்தது. அப்படி எங்கேயும் செல்ல வேண்டியிருந்தால் அம்மா அவனிடம் முன்கூட்டியே சொல்லிவிட்டுத் தான் போவார். ஆனால், அன்று அவர் அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

அவன் இவ்வாறு எல்லாம் நினைத்துக் கொண்டு இருந்தபோது, அவன் அண்டை வீட்டாரின் கதவு திறந்தது. அவன் நண்பன் அலி தான் அவன் அண்டை வீட்டுக்காரன். அலியின் பாட்டி, "நீ எப்போது வந்தாய்? நீண்ட நேரம் ஆகிவிட்டதா?" என்று கேட்டார். "இப்போது தான் வந்தேன், பாட்டி," என்றான் விகரம். அவன் ஏதேனும் கேட்பதற்கு முன் அலியின் பாட்டியே அவன் அம்மாவுக்கு உடல் நலம் இல்லாததால் மருத்துவரைக் காணச் சென்று இருப்பதாகக் கூறினார். இன்னும் சற்று நேரத்தில் அவர் வந்து விடுவார் என்றும் கூறினார். அதோடு, அவன் அம்மா பாட்டியிடம் அவனுடைய மதிய உணவைக் கொடுத்து விட்டுச் சென்றுள்ளதாக அலியின் பாட்டி கூறினார்.

விகர்ம் அவர் வீட்டிற்குச் சென்று அம்மா கொடுத்து விட்டுச் சென்ற உணவைச் சுவைத்துச் சாப்பிட்டான். பின் பாட்டியின் அனுமதியுடன் அலியோடு கணினியில் விளையாடிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் அம்மா வந்ததும் பாட்டிக்கு நன்றி சொல்லி விட்டு வீடு திரும்பினான்.

வினாக்கள்

19. விக்ரமுக்கு **எது** அதிர்ச்சியைத் தந்தது? (2 ம)

____________________________________________

____________________________________________

____________________________________________

20. அம்மா அவனுக்காக **எங்கே** காத்திருப்பார்? (1 ம)

____________________________________________

____________________________________________

____________________________________________

21. அலியின் பாட்டி அவனிடம் **என்ன** கூறினார்? (2 ம)

____________________________________________

____________________________________________

____________________________________________

22. அம்மா பாட்டியிடம் **எதைக்** கொடுத்துவிட்டுச் சென்றார்? (2 ம)

____________________________________________

____________________________________________

____________________________________________

23. விக்ரம் அண்டை வீட்டில் **என்னென்ன** செய்தான்? (2 ம.பெ)

____________________________________________

____________________________________________

____________________________________________

**P4**

**TESTPAPER 13**

ஏழுமலை பள்ளி முடிந்து.........

1. 3 2. 2 3. 4 4. 2

5. 3 6. 2 7. 1 8. 4 9. 2

10. 4 11. 3 12. 4 13. 3 14. 1

15. 8 16. 4 17. 2 18. 5

19. விக்ரம் பள்ளி முடிந்து வீடு திரும்பியபோது அவன் வீட்டின் கதவு பூட்டியிருந்தது. இது அவனுக்கு அதிர்ச்சியைத் தந்தது.

20. அவன் அம்மா தினமும் அவனுக்காக வாசலில் காத்திருப்பார்.

21. அவன் அம்மாவுக்கு உடல் நலம் இல்லாததால் மருத்துவரைக் காணச் சென்றிருப்பதாக அலியின் பாட்டி கூறினார்.

22. அம்மா பாட்டியிடம் விக்ரமின் மதிய உணவைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

23. விக்ரம் அவனுடைய அம்மா கொடுத்த உணவை உண்டான். பிறகு பாட்டியின் அனுமதியோடு அலியோடு கணினியில் விளையாடினான்.